விடுநர்,

முனைவர்.ப.மணி முதல்வர் (பொ)

மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி

நிறுவனம், இராணிப்பேட்டை. 632 401

பெறுநர்

முதன்மைக் கல்வி அலுவலர்,

முதன்மைக் கல்வி அலுவலகம்,

வேலூர்.

ந.க.எண்.139/அ.2/2023 நாள். 26.07.2023

ஐயா/அம்மையீர்,

| | |
|---|---|
| பொருள் | ஆசிரியர் கல்வி - இராணிப்பேட்டை - மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் - மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பு - தமிழர் நாகரிகம், பண்பாடு, கலாச்சாரம் மற்றும் தொன்மையின் சிறப்பு மற்றும் தமிழகமெங்கும் விரவியிருக்கும் தொல்லியல் துறையுடன் இணைந்து பயிற்சி அளித்தல் - ஆசிரியர்களை பணிவிடுவிப்பு செய்யக் கோருதல் - தொடர்பாக. |
| பார்வை | சென்னை.6. மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.2540/உ1/2022 நாள். 20.04.2023. |

------

பார்வையில்காணும் செயல்முறைகளின்படி, மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பு தமிழர் நாகரிகம், பண்பாடு, கலாச்சாரம் மற்றும் தொன்மையின் சிறப்பு மற்றும் தமிழகமெங்கும் விரவியிருக்கும் தொல்லியல் தலங்கள் குறித்த தகவல்களை மாணவர்களுக்குச் சிறப்பாகக் கொண்டு சேர்க்கும் வண்ணம் தொல்லியல் துறை வாயிலாக **வேலூர்** மாவட்டத்தில் இணைப்பில் உள்ள அரசுப் பள்ளிகளில் பணிபுரியும் 20 பட்டதாரி ஆசிரியர்களுக்கு 6 நாள்களுக்கு உண்டு உறைவிடப் பயிற்சி (களப்பயணம்) உட்பட வழங்க அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பயிற்சி 07.08.2023 முதல் 12.08.2023 வரை DIET, திருவண்ணாமலை, Yatra Nivas (A) Aalalayam என்ற இடத்தில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இப்பயிற்சி உண்டு உறைவிடப் பயிற்சியாக இருப்பதால் பயிற்சியல் கலந்து கொள்ளும் ஆசிரியர்கள் மற்றும் ஒருங்கிணைப்பாளர்கள் 6 நாள்களும் பயிற்சி மையத்தில் தங்குவதற்க்கு தேவையான வசதிகள் செய்யப்பட்டுள்ளது. எனவே இப்பயிற்சியில் கலந்து கொள்வதற்கு ஏதுவாக இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ள ஆசிரியர்களை பயிற்சி நடைபெறும் இடத்திற்கு முந்தைய நாள் இரவு 08:00 மணிக்குள் தவறாமல் கலந்து கொள்ள பணிவிடுவிப்பு செய்ய சம்மந்தப்பட்ட பள்ளி தலைமையாசிரியர்களுக்கு அறிவுறுத்துமாறு கனிவுடன் தெரிவிக்கலாகிறது.

**இணைப்பு.**

1. ஆசிரியர்களின் பெயர் பட்டியல்

முதல்வர் (பொ)

மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,

இராணிப்பேட்டை. 632 401.

நகல்.

01. சென்னை -06, மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பலாகிறது.
02. மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலைக் கல்வி) வேலூர் அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பலாகிறது.
03. மாவட்டக் கல்வி அலுவலர் (தொடக்கக் கல்வி) வேலூர் அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பலாகிறது.
04. உதவி திட்ட அலுவலர், வேலூர் அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பலாகிறது.

Scanned with CamScanner